# தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.10.2012 P.M**

**29.10.2012 A.M**

## கடலூர் , புதுச்சேரியில் கனமழை வாய்ப்பு



கடலோர மாவட்டங்களிலும் வட தமிழகத்திலும் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் காரைக்காலுக்கு கிழக்கே 600 கி.மீ. தொலைவில் புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் அக்டோபர் 29-ம் தேதி முதல் 5 நாள்களுக்கு கனமழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதன்படி புதுச்சேரி, காரைக்கால், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பலத்த மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### கடலூரில் கடல் சீற்றம்

கடலூர் மாவட்டத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை மீன்பிடிக்கச் செல்லவில்லை.ஞாயிற்றுக்கிழமை காலை முதல் கருமேகங்கள் சூழ்ந்து, குளிர்ந்த காற்றுடன் மழை பெய்து வருகிறது.

காற்றழுத்தத் தாழ்வு நிலைக் காரணமாக கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளது. தாழங்குடா, தேவனாம்பட்டினம், அக்கரகோரி, சோனாங்குப்பம், சொத்திக்குப்பம், சித்திரப்பேட்டை, தம்மனாம்பேட்டை, பெரியகுப்பம், ரெட்டியார்பேட்டை உள்ளிட்ட மீனவ கிராம மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லவில்லை. படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் அனைத்தும்

பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. கடலூர் சில்வர் பீச் தொடர்ந்து கடல் நீரில் மூழ்கிக் கிடந்தது.

மழை குறித்த பாதிப்புகளை கடலூர்- 04142 230021, பண்ருட்டி- 04142 242110 என்ற தொலைபேசியில் 24 மணி நேரமும் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாழ்வானப் பகுதியில் இருப்பவர்களை தங்க வைப்பதற்கு ஏதுவாக பள்ளி மற்றும் திருமண மண்டபங்களை வருவாய்த் துறையினர் தயார்படுத்தி வைத்துள்ளனர்.

மழையால் சாலைகள் சேதம் அடைந்து உள்ளதால் வாகன ஓட்டிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**சிதம்பரத்தில்...**

சிதம்பரத்தில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை பலத்த மழை பெய்தது.

மழை விவரம்: சிதம்பரம்- 22 மி.மீ, அண்ணாமலைநகர்- 11.50 மி.மீ, பரங்கிப்பேட்டை- 18 மி.மீ., மாவட்டத்தில் 51.80 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் வெள்ளப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நீர்நிலைகள் மற்றும் வெள்ளப் பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மணல் மூட்டைகள் பொதுப்பணித் துறையினரால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பாதுகாப்பு நலன் கருதி வீராணம் ஏரி முழுமையாக நிரப்பப்படாமல் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 45.40 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. மொத்தக் கொள்ளவு 47.50 அடியாகும். ஏரியிலிருந்து சென்னை குடிநீர் வாரியத்துக்கு விநாடிக்கு 75 கனஅடி நீர் அனுப்பப்படுகிறது.

ஏரியிலிருந்து உபரிநீர் சேத்தியாத்தோப்பு வி.என்.எஸ். அணைக்கட்டு வழியாக வெள்ளாற்றில் 1147 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு கடலுக்குச் செல்கிறது.

**விழுப்புரம் மாவட்டத்தில்...**

மாவட்டம் முழுவதும், கடந்த 18-ஆம் தேதி முதல் ஒரு வாரம் மழை பெய்தது. இதனால், அணைகளில் நீர்மட்டம் பாதியளவு எட்டியது. கோமுகி அணையில் மட்டும் நீர்மட்டம் 40 அடியைத் தாண்டியதால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மழை பெய்தது. இதேபோல் மாவட்டத்தில் பிற பகுதிகளான, திண்டிவனம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை பகுகளில் காலையும், மாலையும் லேசான மழை பெய்தது. மீண்டும் மழை தொடங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மீனவர்கள் கரைக்கு திரும்ப எச்சரிக்கை**

கனமழை எச்சரிக்கை காரணமாக கடலுக்குள் வெகுதூரத்தில் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் கரையை நோக்கி திரும்ப வேண்டும் என்றும் புதுச்சேரி நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் இரு தினங்களுக்கு மழை நீடிக்கும். கடலுக்குள் வெகுதூரத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கரைக்கு திரும்ப வேண்டும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் தொடந்து பெய்துவரும் மழை காரணமாக, ஏரிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. வீடுகளைச் சுற்றி சூழ்ந்துள்ள நீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுபோன்ற சூழ்நிலையில் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புகள் இருப்பதால் சுகாதாரத்துறையும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

**காரைக்காலில்...**

பலத்த மழை காரணமாக, காரைக்கால் கடல் பகுதியில் மூன்றடுக்கு அலை இருந்ததால், ஞாயிற்றுக்கிழமை மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மேலும், கடலுக்குள் விரித்த வலையையும் மீட்க முடியாத நிலை ஏற்பட்டது.

காரைக்கால் கடல் பகுதி சீற்றத்துடன் காணப்பட்டது. சனிக்கிழமை இரவு காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப் படகை இயக்கிச் சென்றோர், அலை சீற்றத்தால் கடலுக்குள் செல்ல முடியாமல் திரும்பிவந்தனர்., காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 10 மீனவக் கிராமங்களைச் சேர்ந்த 2000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. துறைமுகத்தில் எல்லா விசைப் படகுகளும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**பெண்ணாடம் வெள்ளாற்றில் வெள்ளப்பெருக்கு**

பெண்ணாடம் அருகே தாற்காலிக மாற்று பாலம், வெள்ளப் பெருக்கால் துண்டிக்கப்பட்டதால் 3 மாவட்டங்களிடையே பஸ் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

கடலூர் மாவட்டம், பெண்ணாடத்தை அடுத்த முருகன்குடியில் உள்ள வெள்ளாற்றில் ரூ.9.50 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. கடலூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய பாலமாகும். கட்டுமானப் பணி நடந்து வருவதால் போக்குவரத்துக்கு தாற்காலிக மாற்று பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

பெலாந்துறை அணைக்கட்டின் தேங்கிய மழை நீர் வெள்ளாற்றில் சென்றதால் தாற்காலிக பாலத்தின் ஒரு பகுதி சேதம் அடைந்தது. இதனால் போக்குவரத்து தடைபட்டுள்ளது. தகவல் அறிந்த நெடுஞ்சாலை துறையினர் உடைந்த பாலத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பாலம் உடைந்ததால் கடந்த இரு நாள்களாக போக்குவரத்து தடைபட்டுள்ளது. இதனால் கடலூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கடலோர மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் கனமழை



வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேலும் தீவிரமாகி தாழ்வு மண்டலமாக மாறுவதற்கு வாய்ப்பு இருப்பதால், அடுத்த 24 மணி நேரத்திற்கு கடலோர மாவட்டங்களில் மிக கனமழை இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடந்த 25ம் தேதி அந்தமான் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது மெதுவாக தமிழகத்தை நோக்கி நகரத் தொடங்கியது. அதனால், அக். 29ம் தேதி முதல் தமிழகத்தில் மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

24 மணி நேரத்திற்கு கனமழை: இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியதாவது: இந்த புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி தற்போது தென்கிழக்கு மற்றும் தென் மேற்கு வங்கக்கடல் ஒட்டிய பகுதியில் நிலை கொண்டுள்ளது. இது மேலும் வலுப்பெற்று தாழ்வு மண்டலமாகும் வாய்ப்பு இருக்கிறது. அதனால், தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதியில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை அல்லது மிக கனமழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும், கடலோர பகுதிகளில் பலத்த காற்றும், மற்ற பகுதியில் மிதமான

காற்றும் வீசும். கடலுக்குள் மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மழை அடுத்த 3 அல்லது 4 நாட்களுக்கு நீடிக்கும் என்றார்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: புதிய காற்றழுத்த தாழ்வு நிலையால், வடகிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி,மீ வேகத்தில் கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதியில் பலத்த காற்று வீசும். அந்த தீவிரக் காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடையும் எனஎதிர்பார்ப்பதால் கடலுக்குள் சென்ற மீனவர்கள் திரும்பி வருமாறு அறிவுறுத்தப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் பெய்த மழையின் அளவு: (ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரம் செ.மீ.) காரைக்கால் 12, நாகப்பட்டினம் 11, திருவாரூர் 9, திருத்துறைப் பூண்டி 8, தரங்கம்பாடி 5, மன்னார்குடி 4, நன்னிலம், முத்துப்பேட்டை 3, வேதாரண்யம், சிதம்பரம், சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், ஒரத்தநாடு 2, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை, ராஜபாளையம், குடவாசல் 1.

28th oct 2012 P.M

**கடலூர் , புதுச்சேரியில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை**

கடலூர், புதுச்சேரியில் அக்டோபர் 29-ம் தேதி (திங்கள்கிழமை) பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

÷புதுச்சேரியில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகளின் சிரமம் கருதி, புதுச்சேரியில் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை பள்ளிக் கல்வி இயக்குநர் வல்லவன் பிறப்பித்துள்ளார். மேலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இதேபோல் கடலூர் மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கை காரணமாக அரசுப் பள்ளி, தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ சனிக்கிழமை இரவு அறிவித்தார்.

**வெங்காயம் , உருளைக்கிழங்கு விலை உயர்வு**

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு விழுப்புரம் மார்க்கெட்டில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை உயர்ந்துள்ளது.

விழுப்புரம் பதர்ஷா வீதியிலுள்ள தினசரி மார்க்கெட்டில் வெங்காயம், உருளைகிழங்கு உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகள் பெங்களூரு மற்றும் தமிழ்நாட்டை ஒட்டிய கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகிறது.

÷பொதுமக்கள் பயன்படுத்தும் பெல்லாரி வெங்காயம் தினமும் 30 டன் வரை விற்பனைக்கு பெங்களூருவில் இருந்து லாரிகளில் வரும்.

இந்நிலையில் வரத்து குறைவு மற்றும் பக்ரீத் பண்டிகையால் ஓரு வாரத்துக்கு மேலாக இவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

÷இரு நாள்களுக்கு முன்பு கிலோ ரூ.10-க்கு விற்பனையான வெங்காயம், சனிக்கிழமை கிலோ ரூ.14-க்கு விற்பனையானது. 50 கிலோ மூட்டை ஓன்று ரூ.650 முதல் 700 வரை விற்பனையானது. அதேபோல், உருளைக்கிழங்கும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

மூன்று நாள்களுக்கு முன்பு, ரூ.18-க்கு விற்றது, சனிக்கிழமை ரூ.21-க்கு விற்பனையானது.

÷பக்ரீத் பண்டிகையால் இரு நாள்களாக வெங்காயம், உருளைக் கிழங்கு விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு கிலோவுக்கு ரூ.4 உயர்ந்துள்ளது.

## உழவர் பாதுகாப்புத் திட்ட ஆய்வுக் கூட்டம்

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்ட முகாம் குறித்த ஆய்வுக் கூட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த வட்டத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் வரும் 6-ஆம் தேதி முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக சேர்ப்பது குறித்த முகாம்கள் நடக்கிறது.

÷இந்த முகாம்களில் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் உரிய முறையில் விண்ணப்பித்து திருமண உதவித்தொகை, விபத்து நிவாரணம், ஈமச்சடங்கு நிவாரணம் உள்ளிட்ட வகைகளில் பயனடைவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டத்துக்கு மாவட்ட கலால் உதவி ஆணையர் கே.கார்த்திகேயன் தலைமை வகித்து விளக்கிப் பேசினார். சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் சரஸ்வதி, மண்டல துணை வட்டாட்சியர் ராஜூ ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவியாளர் வேணுகோபால், சி.புஷ்பநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு

பழனி வட்டாரப் பகுதிகளில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் நேரடி ஆய்வு மேற்கொண்டார்.

கணக்கன்பட்டி பகுதிகளில் துவரை நடவு முறையையும், செயல் விளக்கத் திடல்களையும், எரமநாயக்கன்பட்டியில் உள்ள மானாவாரி இருபோக சாகுபடி நிலங்களில் மக்காச்சோளம், பயறுவகைத் திடல்களையும் அவர் ஆய்வு செய்தார். விவசாயிகளிடம் வயல்களில் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் சின்னக்கலையமுத்தூரில் உள்ள அரசு விதை சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு, விரைவுபடுத்தப்பட்ட பயறுவகைத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கான இடுபொருள்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வழங்கினார்.

கரடிக் கூட்டத்தில் உள்ள சமுதாய துவரை நாற்றங்காலை பார்வையிட்ட அவர், குதிரையாறு அணையில் உள்ள கூட்டு இயற்கை வேளாண் பண்ணையில் துவரை நடவுப் பணிகளை துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்ட தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் செல்வராஜ், பழனி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைச்சாமி, வட்டார வேளாண்மை அலுவலர்கள் கணேசன், துரைச்சாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பவானிசாகர் நீர்மட்டம் 56.08 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 56.08 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,436 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 2,083 கன அடி நீரும், வாய்க்காலில் 1,800 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 6.05 டி.எம்.சி.

## உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம்கள் :நவம்பர் 5 முதல் 9 வரை நடைபெறுகிறது

திருவண்ணாமலை மாவட்டத்தில் நவம்பர் 5 முதல் 9-ம் தேதி வரை நடைபெறும் முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட 65 வயதுக்கு உள்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த கூலித் தொழிலாளர்களின் குடும்ப நலனை கருத்தில்கொண்டு தமிழக அரசு உழவர் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பெண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம், ஆண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.8 ஆயிரம் வீதம் திருமண உதவித்தொகை

வழங்கப்படுகிறது.

இதுதவிர 60 வயது நிறைவடைந்தவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, விபத்தில் மரணமடையும் உறுப்பினருக்கு ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 500 நிவாரணத் தொகை, உடல் உறுப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை இழப்பீட்டு வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் உறுப்பினரைச் சார்ந்த நபர்களுக்கு கல்வி உதவித்தொகை, ஐடிஐ, பாலிடெக்னிக் முதல் முதுநிலைப் பட்டப்படிப்பு வரையும் மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளுக்கு வீட்டில் இருந்து கல்வி நிறுவனம் சென்று வரும் மாணவ-மாணவிகளுக்கு ரூ.1250 முதல் ரூ.4,750 வரையும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ-மாணவியருக்கு அவர்களின் படிப்புக்கேற்ப ரூ.1450 முதல் ரூ.6,750 வரையும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இதுபோன்று பல்வேறு உதவித்தொகைகளைப் பெற இத் திட்டத்தின் அடையாள அட்டை பெறுவது அவசியம். அடையாள அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் மாவட்டம் முழுவதும் நவம்பர் 5 முதல் 9 வரை நடைபெறுகிறது. இந்த நாள்களில் பொதுமக்கள் தங்கள் வசிக்கும் பகுதி கிராம நிர்வாக அலுவலர்களிடம் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள், சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்களை அணுகலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி ஆலோசனைக் கூட்டம்

தருமபுரி மாவட்டம், சித்தேரியில் தோட்டக்கலைத் துறையின் சார்பில், தோட்டக்கலைப் பயிர் சாகுபடி குறித்த ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறையின் துணை இயக்குநர் க.கலைச்செல்வி சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியின் மூலம் சித்தேரி பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு சித்தேரி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் வி.அழகேசன் தலைமை வகித்தார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் ஜி.ராமசாமி, பொ.இம்மானுவேல், கோ.அழகுகண்ணன், தோட்டக்கலை அலுவலர்கள் நவநீதகிருஷ்ணன், ஏ.ஜி.பாத்திமா, டி.ஜெயசெல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் விவசாயிகளின் கருத்துகளை அறியும் வகையில் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. அவர்களிடமிருந்து ஒருங்கிணைந்த அந்தப் பகுதியில் இப்போது உள்ள சாகுபடி பயிர்கள், தொழில் நுட்பங்கள், தேவையானத் திட்டங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் அறியப்பட்டன.

விவசாயிகள் தெரிவித்த கருத்துக்கள், விவரங்கள் குறித்து சென்னையில் உள்ள தலைமைச்

செயலகத்தில் அக்டோபர் 30-ஆம் தேதி நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில் ரூ. 3.15.

**சம்பா நெல் சாகுபடிக்கு மேட்டூர் அணையில் மீண்டும் தண்ணீர் திறப்பு**

சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து சனிக்கிழமை மீண்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து சம்பா நெல் சாகுபடிக்காக செப்டம்பர் 17ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கடந்த வாரத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்த மழையால் கடந்த 23ஆம் தேதி முதல் மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. இப்போது காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்வது குறைந்துள்ளது. இதையடுத்து, மேட்டூர் அணையிலிருந்து சனிக்கிழமை காலை முதல் விநாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

சம்பா நெல் சாகுபடிக்காக மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து, நீர் மின் நிலையங்களில் மின் உற்பத்தி தொடங்கியது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 65.43 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,711 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 28.89 டி.எம்.சியாக இருந்தது.

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளின் தேவைக்கு ஏற்ப திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சூறைக்காற்றில் சாய்ந்த வாழை மரங்கள்**



கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு திடீரென சூறைக்காற்றுடன் பெய்த மழையில் வாழை, முருங்கை உள்ளிட்டவை சேதம் அடைந்தன.

கடந்த டிசம்பர் மாதம் புயல் வீசியது முதல் கடலூர் மாவட்டத்தில் கடுமையான வெயில் அடித்தது. புதன்கிழமை காலை கடலூரில் வெயில் சுட்டெரித்தது. மாலை 5 மணிக்கு மேல் திடீரென கருமேகம் சூழ்ந்து, இரவு 7 மணியளவில் பலமான சூறைக் காற்று வீசியது.

மண்ணையும், தூசியையும் சூறைக்காற்று வாரி அடித்ததில் சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்தனர். அதே நேரத்தில் மழையும் சேர்ந்து அடித்ததால் சாலைகளில் செல்வோர் நிலைகுலைந்து, வீடு திரும்ப முடியாமல் அவதிப்பட்டனர். மழை நின்றும் நீண்ட நேரம் மின்னல் நீடித்தது.

இதனால் விளம்பர டிஜிட்டல் பேனர்கள் முறிந்து விழுந்தன. சில டிஜிட்டல் பேனர்கள், அவை கட்டப்பட்டு இருந்த கழிகள் முறிந்து அருகில் இருந்த மின் கம்பிகளின் மீது விழுந்ததில் மின் கம்பிகள் அறுந்தன.÷மின் கம்பிகள் அறுந்ததால் கடலூர், முதுநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

வாழைகள் சேதம்: கடலூர் மற்றும் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழை, முருங்கை உள்ளிட்ட முறிந்து விழுந்து சேதம் அடைந்தன. ÷கடலூர் ஒன்றியம் மலை கிராமங்களான ராமாபுரம், வடக்கு ராமாபுரம், சாத்தங்குப்பம், வழிசோதனை பாளையம், வண்டிக்குப்பம் உள்பட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து சாய்ந்து விட்டன. கரும்பு பயிர்களும் காற்றில் சாய்ந்து சேதம் அடைந்தது.

புயல் பாதிப்பு, மழையின்மை, மின்வெட்டு, தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே பயிர் செய்யப்பட்ட வாழை, கரும்பு, முருங்கை உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் சூறைக்காற்றால் சேதம் அடைந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.10.2012 A.M**

## திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

ராஜபாளையம்,:ராஜபாளையம் வட்டத்தில் நீர்நில வள திட்டப்படி, நகரியாறு உபவடிப் பகுதி விவசாயிகளுக்கு, திருந்திய நெல்சாகுபடி பயிற்சி வேளாண்மை அலுவலகத்தில் நடந்தது.நீர்நில வள திட்டம் இந்த ஆண்டில் தேவியாறு, நகரியாறு, சீவலப்பேரி ஆறு, காயல்குடி ஆறு உபவடி பகுதிகளில் செயல்பட உள்ளது. இதில், நகரியாறு விவசாயிகளுக்கான பயிற்சி முகாமை உதவி இயக்குனர் பழனி செல்வம் துவக்கி வைத்தார். திருந்திய நெல்சாகுபடி, அதன் முறை, பயன்கள் குறித்து துணை இயக்குனர் கனகராஜன் விளக்கினார். இந்த சாகுபடி முறையில், நீர்நில வள திட்டத்தின்படி விவசாயிகளுக்கு கிடைக்கும் மானியங்கள் குறித்து ராஜபாளையம் வேளாண்மை அலுவலர் தனலட்சுமி, தக்கைப் பூண்டு சாகுபடி மற்றும் இயற்கை உரத்தின் முக்கியத்துவம் குறித்து வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி பேசினர். நெல் இயந்திர நடவு முறை செயல்விளக்கம் நடந்தது. பயிற்சியில், நகரியாறு உபவடி கோட்டத்தை சார்ந்த சேத்தூர், தேவதானம், கோவிலூர் விவசாயிகள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ரவி, ரமேஷ் செய்து இருந்தனர்

## தென்காசி பகுதியில் வெங்காயம் விலை கிடுகிடு

தென்காசி:தென்காசி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வெங்காயம் விலை கிடுகிடு என உயர்ந்துள்ளது.நெல்லை மாவட்டத்தில் மேற்கு பகுதியான ஆலங்குளம், மாறாந்தை, அத்தியூத்து, மாயமான்குறிச்சி, கிடாரக்குளம், ராஜபாண்டி, மேலப்பாவூர், கீழப்பாவூர், வெள்ளக்கால், வீ.கே.புதூர், சுரண்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த மாதம் வெங்காயம் பயிரிடப்பட்டிருந்தது. தென்மேற்கு பருவமழை பொய்த்த நிலையிலும் கிணற்று பாசனம் மூலம் வெங்காய பயிர்களுக்கு முறையாக தண்ணீர் பாய்ச்சியதின் அடிப்படையில் வெங்காயம் அமோக விளைச்சல் இருந்தது.இந்நிலையில் விலை இல்லாத நிலை காணப்பட்டதால் சிறியரக வெங்காயத்தை மண்டி அமைத்து பாதுகாத்து வந்தனர். தற்போது தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால் வெங்காயத்தின் தேவையும் அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை தலா கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சிறிய வெங்காயம் 45 ரூபாய்க்கும், 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பல்லாரி கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உழவர்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் எளிதாக நிதியுதவி பெற நவ.,5ல் சிறப்பு முகாம் துவக்கம்**

தூத்துக்குடி:உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவி உள்ளிட்ட நிதியுதவியினை மக்கள் எளிதாக பெறுவதற்கு வசதியாக நவம்பர் 5ம் தேதி முதல் 9ம் தேதி வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து வி.ஏ.ஓ ஆபிஸ்களில் சிறப்பு முகாம் நடக்கிறது. இந்த முகாமை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்தவர்களின் திருமணத்திற்கு பெண்ணாக இருப்பின் 10 ஆயிரம் ரூபாயும், ஆணாக இருப்பின் 8 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் குழந்தைகளின் திருமணத்திற்கு பெண்ணாக இருந்தால் 10 ஆயிரமும், ஆணாக இருந்தால் 8 ஆயிரமும் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் இயற்கை மரணத்திற்கு 10 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

உறுப்பினரின் விபத்து இறப்பிற்கு ஒரு லட்ச ரூபாயும், காயம் ஏற்பட்டால் காயத்திற்கு ஏற்ப 20 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்ச ரூபாய் வரை நிவாரணமாக வழங்கப்படுகிறது.

தொழில் பயிற்சி நிறுவனம், பல் தொழில் நுட்ப பயிற்சி, கவின் கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டய படிப்பு, இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழில் கல்வி மற்றும் முதுநிலை தொழிற்கல்வி ஆகியவை பயிலும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஆயிரத்து 250 ரூபாய் முதல் 6 ஆயிரத்து 750 ரூபாய் வரை படிப்பிற்கு ஏற்ப கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் இறப்பிற்கு ஈமச்சடங்கு செலவிற்காக 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

60 வயதை கடந்த உழைக்கும் திறன் இல்லாத ஆதரவற்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. காசநோய், புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு சிகிச்சை காலத்தில் ஆயிரம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகைகளை பெற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்தில் உள்ள சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தாருக்கு மனுச் செய்து நிதி உதவித் தொகையை பெற்றுக் கொள்ளலாம். இதற்காக 5.11.2012 முதல் 9.11.2012 வரை இந்த திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறுவதற்காக சிறப்பு முகாம்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் நடத்தப்படுகிறது.

எனவே இந்த திட்டத்தின் கீழ் மேற்கண்ட உதவித் தொகைகளை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலகத்தில் (வி.ஏ.ஓ ஆபிஸ்) மனுச் செய்து நிதி உதவியினை முதல்வரின்

உழவர்பாதுகாப்பு திட்ட உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவுசெய்ய வேளாண் துறை வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்' என வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வருகின்ற ரஃபி பருவத்தில், 10 ஆயிரத்து 500 ஹெக்டேரில் நெல், 20 ஆயிரம் ஹெக்டேரில் மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி, கரும்பு, ராகி மற்றும் எள் ஆகிய இறவை பாசன பயிர்கள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.மாவட்டம் முழுவதும் வெள்ளத்தாலும், வறட்சியாலும், பூச்சி நோய் தாக்குதலாலும் பயிர் சேதாரம் அடைந்து மகசூல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த பாதிப்பில் இருந்து நிவாரணம் பெற மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் பயிர் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.பயிர் கடன்கள் பெறும் போது, பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கண்டிப்பாக பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய வேண்டும். வங்கி கடன் பெறாத விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன் அடயலாம்.நெல் பயிருக்கு, 10 யூனியன்களில் உள்ள விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு, 87 ரூபாயும், மக்காச்சோளத்துக்கு கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை யூனியனை சேர்ந்த விவசாயிகள் மட்டும் ஏக்கருக்கு, 87 ரூபாயும், நிலக்கடலைக்கு, 10 யூனியன் விவசாயிகள் ஏக்கருக்கு, 204 ரூபாயும், பருத்திக்கு கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, மத்தூர், பர்கூர், காவேரிப்பட்டணம் யூனியன்களை சேர்ந்த விவசாயிகள் ஏக்கருக்கு, 287 ரூபாயும், கரும்பு பயிருக்கு, 840 ரூபாயும், ராகி பயிருக்கு பர்கூர், காவேரிப்பட்டணம் யூனியனை சேர்ந்த விவசாயிகள் தவிர மற்ற யூனியனை சேர்ந்த விவசாயிகள் ஏக்கருக்கு, 67 ரூபாயும், எள்ளுக்கு, பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி தவிர மற்ற யூனியன்களை சேர்ந்த விவசாயிகள் ஏக்கருக்கு, 48 ரூபாயும் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பயிர் சாகுபடி செய்த உடன் அருகில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் உரிய பதிவு கட்டணத்தை செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.மேலும், விபரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குர் மற்றும் களப்பணியாளர்களை அணுகலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சம்பா சாகுபடி குறித்த வெள்ளை அறிக்கை

ஈரோடு: "சம்பா நெல் சாகுபடி குறித்த வெள்ளை அறிக்கையை அரசு விரைவில் வெளியிட வேண்டும்,' என, இந்திய மக்கள் இயக்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈரோட்டில், இந்திய மக்கள் இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இயக்க கள அமைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர்கள் ராமசாமி, கோபிநாத் முன்னிலை வகித்தனர்.கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து மின்வெட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால், வேளாண், தொழில், வியாபாரம், கல்வி போன்றவை பாதிக்கப்பட்டுள்ளது. அரசு போர்க்கால அடிப்படையில் விரைந்து மின்தடை பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.நடப்பாண்டு, மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. கால தாமதமாக சம்பா சாகுபடிக்கு, செப்டம்பர் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது, நெற்பயிர் நடவு பணி நடந்து வருகிறது.

இதற்கு, 2013 ஃபிப்ரவரி வரை தண்ணீர் விட வேண்டும்.தமிழக அணைகளில் இதற்கான தண்ணீர் இல்லை. இன்னும், 40 நாட்களுக்கு மட்டுமே மழை இருக்கும். அதற்கு பின் கர்நாடக அணைகளில் இருந்து காவிரிக்கு தண்ணீர் திறப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. தண்ணீர் இல்லாமல், போகும் சூழல் உருவாகும் நிலையில், பெரிய அளவிலான இழப்பு ஏற்படும். எனவே, மாநில அரசு ஆராய்ந்து சம்பா சாகுபடி குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்.இலவச அறிவிப்புகள் இல்லாமல், மது விலக்கைக் கடைப்பிடிக்கும் குஜராத் அரசு, இந்திய அளவில் முன்னோடியாக திகழ்கிறது. அதை தமிழக அரசும் பின்பற்ற வேண்டும். கள்ளுக்கான தடையை அரசு நீக்கி அறிவிக்க வேண்டும். 2013ம் ஆண்டு முதல் கள் இறக்கும் போராட்டம் தீவிரப்படுப்படும். இதற்கு இடம் கொடுக்காமல் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் வெங்கடுசாமி, கள் இயக்கம் மாநில அமைப்பாளர்கள் கதிரேசன், துரைசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ.2.12 கோடி பொருளீட்டு கடன்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், 2011-12ம் நிதியாண்டில், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விளைபொருட்களை இருப்பு வைத்த, 220 விவசாயிகளுக்கு, 2.12 கோடி ரூபாய் பொருளீட்டு கடன் வழங்கப்பட்டுள்ளது.வேளாண் விற்பனைக்குழுவின் கீழ் ஈரோடு மாவட்டத்தில், 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், இரண்டு துணை விற்பனைக் கூடங்கள் இயங்குகின்றன.இவற்றில், நெல், எள், தேங்காய் கொப்பரை, மஞ்சள், பருத்தி, நிலக்கடலை உள்ளிட்ட விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.
ஈரோடு மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் விளைபொருட்களை, ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விற்பனை செய்கின்றனர்.
பொருட்களின் விலை வீழ்ச்சி காலத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பொருட்களை, ஆறு மாதம் வரை இருப்பு வைத்து விற்பனை செய்ய வசதியுள்ளது. இருப்பு வைக்கும் விளைபொருள் மீது, பொருளீட்டுக்கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண் விற்பனை குழு அதிகாரிகள் தெரிவித்ததாவது:ஈரோடு மாவட்டத்தில், ஒழுங்கு முறை விற்பனைக் கூட்டத்தில், இருப்பு வைக்கும் பொருட்களுக்கு மாதம் ஒரு குவிண்டாலுக்கு, 6 ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகிறது. இருப்பு காலங்களில், விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வழங்குகிறது. அதிகபட்சம், ஒரு விவசாயிக்கு, 2 லட்சம் ரூபாய் வரை, 5 சதவீதம் வட்டியில் வழங்கப்படுகிறது. தொடர்ந்து, 3 மாதம் வரை இருப்பு வைத்து பொருளீட்டு கடன் கேட்போருக்கு, ஒரு லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

கடந்த, 2011-12ம் நிதியாண்டில் பொருளீட்டு கடன் திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம், 7,209 டன் விளைபொருளை இருப்பு வைத்த, 220 விவசாயிகளுக்கு, 2.12 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு விளைபொருட்கள் வீழ்ச்சி காரணமாக, ஏராளமான விவசாயிகள் பொருட்களை இருப்பு வைத்துள்ளனர். அடுத்தாண்டில், கடன் தொகை மேலும் அதிகரிக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**உழவர் சந்தை காய்கறிகளுக்கு நுகர்வோர் மத்தியில் கிராக்கி : விலையேற்றத்தால் வந்த மாற்றம்**

ஊட்டி : விண்ணை தொடும் காய்கறிகளின் விலையேற்றத்தால், ஊட்டி உழவர் சந்தையில், கடந்தாண்டை காட்டிலும் நடப்பாண்டில் நுகர்வோர் வரத்து அதிகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் உருளைக் கிழங்கு, பீட்ரூட், காரட், முட்டை கோஸ், காலி பிளவர், பீன்ஸ் உட்பட காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. தவிர, சமவெளி பிரதேசங்களில் விளையும் காய்கறிகளும் அங்கிருந்து வரவழைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக காலம் தவறி பெய்யும் மழை உட்பட பல காரணங்களால் நீலகிரி உட்பட சமவெளி பிரதேசங்களில் காய்கறி மகசூல் குறைந்து வருகிறது. இதனால், "கிடு,கிடு' வென உயர்ந்து வரும் காய்கறிகளின் விலை பொது மக்களை மலைக்க வைக்கிறது.

காய்கறிகளின் விலையை பார்த்து, பார்த்து வாங்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்; வெளி மார்க்கெட்டை விட உழவர் சந்தையில் காய்கறி விலை சற்று குறைவு என்பதால், உழவர் சந்தைக்கு வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க துவங்கியுள்ளது; நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பதால், உழவர் சந்தையில் காய்கறி விற்கும் உழவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

ஊட்டி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் சந்திரன் கூறுகையில்,""ஊட்டி உழவர் சந்தையில் அனைத்து வகை மலைக் காய்கறிகள், பழங்கள் விற்கப்படுகின்றன. காலநிலை மாற்றம் உட்பட பல காரணங்களால் காய்கறி விலையில் ஏற்ற தாழ்வு இருந்தாலும், உழவர் சந்தைக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறைவதில்லை; நாளுக்கு நாள் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. கடந்தாண்டை ஒப்பிடுகையில் இந்தாண்டு காய்கறிகளின் வரத்தும், விவசாயிகள், வாடிக்கையாளர்களின் வரத்தும் அதிகரித்துள்ளது," என்றார்.

விவசாயிகள் போர்வையில்
வியாபாரிகள்...? ஊட்டி உழவர் சந்தைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வரும் நிலையில், அங்குள்ள கடைகள் மீதும் ஆய்வுகள் நடத்தி, விவசாயிகள் நேரடியாக பயன்பெறும் நடவடிக்கைகளையும் தோட்டக்கலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
"கடந்த ஆட்சியின் போது, பல வியாபாரிகள், விவசாயிகளின் "போர்வையில்' கடைகளை எடுத்து, தற்போதும் நடத்தி வருவதாக,' உழவர் சந்தை விவசாயிகள் பலர், மாவட்ட நிர்வாகத்திடம் பல முறை புகார் அளித்தனர்.
ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது, உழவர் சந்தை நிர்வாகத்தில் நல்ல
முன்னேற்றம் ஏற்பட்டு வரும் நிலையில், இத்தகைய குறைகளுக்கு தீர்வு கண்டால், மேலும் பல சிறு விவசாயிகள் நேரடியாக பயனடைய வாய்ப்புள்ளது.

திருப்தியளிக்கும் முன்னேற்றம்...
ஊட்டி உழவர் சந்தையில் கடந்தாண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாத விற்பனை நிலவரத்துடன் இந்தாண்டைய ஒப்பீடு:
ஆண்டு காய்கறி வரத்து உழவர்களின் நுகர்வோர்
மாதம் (மெட்ரிக் டன்) எண்ணிக்கை எண்ணிக்கை
2011 ஆக., 10,80,705 2,313 1,39,961
2011 செப்., 10,21,806 2,273 1,39,691
2012 ஆக., 11,01,155 2,489 1,83,116
2012 செப்., 10,46,580 2,404 1,68,677

## ஊட்டி பச்சை பட்டாணி விலை கிடுகிடு : கிலோ ரூ.200 வரை விற்பனை

ஊட்டி :ஊட்டியில் விளையும் பச்சை பட்டாணிக்கு கிராக்கி அதிகரித்ததால், அதன் விலை, கிலோ 200 ரூபாயை தொட்டது. நீலகிரி மாவட்டம், ஊட்டி அருகேயுள்ள கிராமங்களில் உருளைக் கிழங்கு, காரட், பீட்ரூட், முள்ளங்கி உட்பட காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. ஊட்டி தும்மனட்டி, மேல் கவஹட்டி, மஞ்சூர், கப்பச்சி உள்ளிட்ட கிராமங்களில் அவரை, பச்சை பட்டாணி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.பொதுவாக ஜூலை - ஆகஸ்ட், நவம்பர் - ஜனவரி மாதங்களில் பச்சை பட்டாணி சாகுபடி இருக்கும். இந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஜூன் மாதம் விளைய வேண்டிய பச்சை பட்டாணி விளைச்சல், குறைந்தது.நவம்பர் மாத விளைச்சலுக்கு தயாரான பீன்ஸ் செடிகளில் பூக்கள் பூத்த நிலையில், கடந்த வாரம் பெய்த மழையால், பயிர்கள் நாசமாகின. இதனால் பச்சை பட்டாணி விளைச்சல் வெகுவாக குறைந்து, இதுவரை இல்லாத வகையில் விலை அதிகரித்துள்ளது.ஊட்டி மார்க்கெட்டில் ஒரு கிலோ பச்சை பட்டாணி 150 -200

ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஊட்டி உழவர் சந்தையில், கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கிராமப்புறங்களில் விளையும் டபுள் பீன்ஸ் விலையும், கிலோ 100 ரூபாயை தொட்டது.மேல் கவஹட்டியை சேர்ந்த விவசாயி மகாலிங்கம் கூறுகையில், ""நல்ல மகசூல் காலங்களில் பச்சை பட்டாணிக்கு கிலோவுக்கு 40 -60 ரூபாய் விலை கிடைக்கும். மழையின்மை, காலம் தவறி பெய்த மழை போன்றவற்றால், மகசூல் குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலை உயர்வுக்கு இதுவே காரணம்," என்றார்.

## தேயிலை ஏலத்தில் வீழ்ச்சி

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல விற்பனையில், கடந்த வாரத்தை விட 5 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது.

குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 43வது ஏலம் கடந்த 25 மற்றும் 26ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 13.57 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 10.20 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.37 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த வாரம் ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

விஜயதசதி மற்றும் ஆயுதப்பூஜை விடுமுறையால் கடந்த வாரத்தை விட விற்பனையில் 5 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும், விலையிலும் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த வாரமும் விலையில் 2 ரூபாய் சரிவு காணப்பட்டது. சாதாரண இலை ரகத்துக்கு 72-74 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 95-120 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 76-82 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-135 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

அதிகபட்சமாக "சிடிசி' டஸ்ட் ரக ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 149 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 250 ரூபாயும் விலை கிடைத்தது.

நவம்பர் மாதம் 1 மற்றும் 2ம் தேதிகளில் நடக்கும் 44வது ஏலத்திற்கு 13.24 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 9.70 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.54 லட்சம் கிலோவும் அடங்கும்.

## உழவர் பாதுகாப்பு திட்டம் : உதவித் தொகை பெற வாய்ப்பு

ஊட்டி : உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு, கல்வி உதவித்தொகை, உறுப்பினர் மற்றும் உறுப்பினரை சார்ந்தோருக்கான திருமண உதவித்தொகை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் வழங்கப்படும் மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து நிவாரண உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள 60வயது கடந்த, உடல் உழைப்பு செய்ய இயலாதவர்களுக்கு முதியோர் உதவித்தொகை மற்றும், 18-65 வயது வரையுள்ள பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் காசநோய், புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருப்பின், சிகிச்சை பெறும் தற்காலிக காலத்திற்கு ஓய்வூதியமாக 1000 ரூபாய் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படும் பயன்கள் அனைத்தும் உறுப்பினர் மற்றும் இவர்களது குடும்ப உறுப்பினர்களை சென்றடையும் வகையில், 29ம் தேதி முதல், நவம்பர் 3ம் தேதி வரை சிறப்பு விளம்பர வாரமாக கடைபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் அனைத்து கிராமங்களிலும் இத்திட்டம் தொடர்பான விளக்கங்கள் அந்தந்த கிராம நிர்வாக அலுவலர் மூலம், துண்டுபிரசுரம்; சுவரொட்டி மற்றும் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்யப்படும்.

இதனை தொடர்ந்து வரும் நவ.,5ம் தேதி முதல் 9ம் தேதி வரை மனுக்கள் பெறும் வாரமாக கடைபிடிக்கப்படுகி

றது.

இந்நாட்களில் முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், திட்டங்களின்கீழ் பயன்பெற தங்கள் கிராமத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாரிடம் விண்ணப்பித்து பயனடையலாம். இவ்வாறு, அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

**தடுமாற்றத்தில் கொய்மலர் சாகுபடி :அரசு "மனம்' வைத் தால் எதிர்காலம்**

ஊட்டி : நீலகிரியில் தடுமாறி கொண்டிருக்கும் கொய்மலர் சாகுபடி தொழிலை நிலை நிறுத்த, விவசாயிகளின் பங்களிப்புடன் கார்னேஷன் நாற்று உற்பத்தி செய்யும் அரசு திட்டத்தை விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு மாற்றாக கொய்மலர் சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது. சுமார் 500 சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தேயிலை தோட்டத்தின் ஒரு பகுதியில் பசுமைக் குடில் அமைத்து கார்னேஷன் மலர் சாகுபடியை துவக்கினர்.

நாளடைவில் விவசாயிகளால் மலர் சாகுபடியை தொடர முடியவில்லை. தனியார் நாற்று கம்பெனிகள் மூலம் வழங்கப்பட்ட நாற்றுகள் தரமற்று போனது தான், தொழிலை தொடர முடியாததற்கு காரணம் என விவசாயிகள் பலரும் கூறினர்.

நீலகிரி மாவட்ட சிறு மலர் சாகுபடியாளர் சங்கத்தின் சார்பில், கொய்மலர் சாகுபடியில் உள்ள பிரச்னைகள், அதற்கான காரணங்கள் குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. விளைவாக, மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளின் பங்களிப்புடன், கார்னேஷன் மலர் நாற்றுகளை உற்பத்தி செய்யும் நர்சரியை அமைக்க தோட்டக்கலை துறை அமைச்சகம் அனுமதியளித்து, அதற்கான பரிந்துரையை மாநில அரசுக்கு அனுப்பி வைத்தது. இதற்காக 1

கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தை எதிர்பார்த்து, மலர் சாகுபடி விவசாயிகள் காத்துள்ளனர். நீலகிரி சிறு மலர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் விசுவநாதன் கூறுகையில்,

""சிறு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கார்னேஷன் நாற்று உற்பத்தி நர்சரியை அமைக்க தோட்டக்கலை துறை அதிகாரிகள் பரிந்துரை செய்தனர்; மாநில அரசு இதை ஏற்று, ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தொழிலை தொடர முடியாமல், வங்கி கடன் செலுத்த முடியாமல் தவித்த சிறு மலர் சாகுபடி விவசாயிகளுக்கு மீண்டும் தங்கள் தொழிலை தொடர வசதியாக இருக்கும்," என்றார்.

## உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆய்வுக் கூட்டம்

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் சேர்க்கை முகாம் 6ம் தேதி நடக்கிறது.உளுந்தூர்பேட்டை தாலுகாவில் வரும் 6ம் தேதி தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் சேர்க்கை முகாம் நடக்கிறது. விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்ப்பதற்கான முகாம் உளுந்தூர்பேட்டை, எலவனாசூர்கோட்டை, எறையூர், களமருதூர், செங்குறிச்சி, திருநாவலூர், அரசூர் ஆகிய 7 குறுவட்டங்களில் உள்ள அனைத்து வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களில் நடக்கிறது.இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு திருமண உதவி தொகை, கல்வி உதவி தொகை, இயற்கை மரணத்திற்கான உதவி தொகை, விபத்து நிவாரண தொகை, ஈமச்சடங்கு நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகள் கிடைக்கும்.இதுகுறித்த ஆய்வு கூட்டம் உளுந்தூர்பேட்டை தாசில்தார் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட கலால் உதவி ஆணையர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார் சரஸ்வதி, மண்டல துணை தாசில்தார் ராஜூ முன்னிலை வகித்தனர். வருவாய் ஆய்வாளர்கள் சண்முகம், மணிமேகலை, ஆறுமுகம், சிவசுப்ரமணியன், ஜவஹர் மற்றும் வி.ஏ.ஓ.,க்கள் கலந்து கொண்டனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு கூட்டம்

சின்னசேலம்:சின்னசேலத்தில் உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.ஆர்.டி.ஓ., ராஜசேகரன் தலைமை தாங்கினார். தாசில்தார் வைகுண்டவரதன் வரவேற்றார். ஒன்றிய

சேர்மன்கள் ராஜேந்திரன், ராஜசேகர், வெள்ளி, வெங்கடேசன் முன்னிலை வகித்தனர். குடிமைபொருள் மற்றும் சமூக பாதுகாப்பு தாசில்தார்கள் பார்த்தசாரதி, விஜயா ஆகியோர் உழவர் பாதுகாப்பு திட்டம் பற்றி விளக்கி கூறினர்.அக்., 29ம் தேதி முதல் நவம்பர் 3 ம் தேதி வரை திட்டம் குறித்து விரிவான விளம்பரம் செய்ய ஊராட்சி தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.துணை தாசில்தார் பன்னீர்செல்வம், பி.டி.ஓ., ஞானசேகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## நேரடி விதைப்பு செய்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தி.மு.க., கோரி க்கை

கிள்ளை:மழையால் சேதமடைந்த நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என கலெக்டருக்கு தி.மு.க., முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கலையரசன் கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.மனு விவரம்:பரங்கிப்பேட்டை ஒன்றியம் கீழச்சாவடி, மேலச்சாவடி, நவாப்பேட்டை, காரைப்பாடி, தில்லை விடங்கன், கீழ்அனுவம்பட்டு கிராமங்களில் பருவ மழையை நம்பி விவசாயிகள் நிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்தனர். தற்போது ஓரளவு வளர்ந்த நிலையில் சில தினங்களாக பெய்த மழை யால் நேரடி நெல் விதைப்பு செய்த நிலங்களில் தண்ணீர் தேங்கி மூழ்கி, நெற் பயிர்கள் சேதமடைந்துள்ளது. இதனால் மீண்டும் விவசாயிகள் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.எனவே, பாதித்த கிராமங்களில் வேளாண்மை துறை அதிகாரிகள் மூலம் கணக்கெடுப்பு செய்து நேரடி நெல் விதைப்பு செய்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்செயல்படுத்த குழு அமைப்பு : கலெக்டர்

நாமக்கல்: "தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டம், நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்த, கலெக்டர் தலைமையில், குழு அமைக்கப்பட்டுள்ளது' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்தார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:மத்திய அரசு திட்டமான, தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டம், இந்தாண்டு முதல் செயல்படுத்தபட உள்ளது. இத்திட்டம், நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்த, கலெக்டர் தலைமையில், உணவு பதப்படுத்தும் இயக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினை தொடர்பு முகமையாக கொண்டு இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், மானிய பங்குத் தொகை, 75:25 என்ற விகிதத்தில், மத்திய அரசு, மாநில அரசு வழங்கி செயல்படுத்தபட உள்ளது.இந்த திட்டத்தில், தொழில்நுட்ப மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்துதல் உள்ளிட்ட தளவாட மற்றும் தொழில் கட்டுமானத்திற்கு, 25 சதவீதம் என, 50 லட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படுகிறது. தோட்டக்கலை பயிர் அல்லாத பொருட்களுக்கு, குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம், கருவி, தளவாட மற்றும் தொழில்நுட்ப கட்டுமானத்திற்கு, 50 சதவீத மானியம் வீதம், அதிகபட்சமாக, 10 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.மேலும், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டய படிப்புகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், புத்தகம், பரிசோதனை கூட கருவிகளுக்கு அதிகபட்சமாக, 75 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மேம்பாட்டுக்கென, கருத்தரங்கு மற்றும் பணிமனை, படிப்பு மற்றும் கணக்கெடுப்பு நடத்த, 50 சதவீத மானியத்துடன், அதிகபட்சமாக மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்படும்.தமிழகத்தில், கடந்த ஏப்ரல் மாதம் முதல் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்

செயல்படுத்தப்பட்டு வருவதால், 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மானியம் கோரும் அனைத்து புதிய விண்ணப்பங்களை, மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கம், வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) மூலம் மாநில இயக்கக இயக்குனருக்கு அனுப்ப வேண்டும்.இதுபற்றிய விரிவான விவரம் அறிய விரும்புவோர், தீதீதீ.ட்ணிஐூணீடி.ணடிஞ்.டிண என்ற இணையதள முகவரி அல்லது வேளாண் துணை இயக்குனரை (வேளாண் வணிகம்) சந்திந்து அறிந்து கொள்ளலாம்.

### போலி உரம் விற்பனை : விவசாயிகள் குற்றச்சாட்டு

அரூர்: அரூர் பகுதியில் உள்ள உரக்கடைகளில், போலி உரம் விற்பனை செய்யப்படுவதாக, விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.அரூர் நகரில், 15க்கும் மேற்பட்ட உரக்கடைகள் உள்ளன. ஒருவாரமாக பருவ மழை பெய்ததையடுத்து, விவசாயிகள் தீவிரமாக விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எல்லப்புடையாம்பட்டியை சேர்ந்த விவசாயி ஒருவர், அரூரிலில் உள்ள உரக்கடையில், 50 கி÷,லா எடை கொண்ட, 17-17 கொண்ட கலப்பு உரம், 800 ரூபாய் விலையுள்ள ஒரு மூட்டை வாங்கினார்.அதனை மஞ்சள் பயிருக்கு இட்டுள்ளார். அதில், 20 கிலோவுக்கும் மேல் உரம் கரையாமல் வெங்கச்ச கற்களாக இருந்துள்ளன. இதுகுறித்து அந்த விவசாயி உரக்கடை உரிமையாளரிடம் கேட்டுள்ளார்.

அவர், தான் ஒன்றும் செய்ய முடியாது. இதற்கு சம்பந்தப்பட்ட உர நிறுவனம் தான் பொறுப்பு என்று தெரிவித்துள்ளார்.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:அரூர் நகரில் உள்ள உரக்கடைளில் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் உரம் வாங்கியதற்கான விற்பனை ரசீது வழங்கப்படுவதில்லை. அதேபோல் உரம் விலை குறித்த விலைப்பட்டியலும் கடைகளில் வைக்கப்படுவதில்லை. புகார் தெரிவிக்க மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தொலைபேசி எண்ணும் வைக்கப்படுவதில்லை. கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.
இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மனோகரனிடம் கேட்டபோது, ""அரூர் நகரில் உள்ள உரக்கடைகளில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

### சம்பா சாகுபடி பணிகள் "சுறுசுறு 'தி.பூண்டியில் விவசாயம் தீவிரம்

திருத்துறைப்பூண்டி: மேட்டூர் அணை திறக்கப்பட்டு, 40 நாட்களுக்கு பின், திருத்துறைப்பூண்டி பகுதியில் சம்பா நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது.காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை காலதாமதமாக செப்டம்பர், 17ம் திறக்கப்பட்டது. தண்ணீர் திறப்பது காலம் கடந்து வருவதை உணர்ந்த விவசாயிகளும், வேளாண்மை துறையினரும், நேரடி விதைப்புக்கு தங்களை

தயாரிப்படுத்தினர். ஆங்காகே பெய்த மழையை கொண்டு, கோடை உழவு மேற்கொண்டு, பாரம்பரிய விதைகளான மாப்பிளை சம்பா, பாறம் சம்பா, கவுனி, கார், சீரக சம்பா, வேளாண்மை துறை சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட சி.ஆர்., 1009, கல்சர் ஆடுதுறை 42, ஆடுதுறை 45, பாபட்லா போன்ற நெல்விதைகளை நேரடி விதைப்பில் தெளித்தனர்.அவ்வபோது பெய்த மழையால், நெல் விதைகள் விளைந்து, நல்ல நிலையில் உள்ள நிலையில், மேட்டூர் அணை திறக்கப்பட்டு, ஒரு மாதத்துக்கு மேலாகியும் கடை மடை பகுதியான திருத்துறைப்பூண்டி, முத்துப்பே ட்டை பகுதிகளில், குளங்களுக்கு கூட தண்ணீர் வராத நிலையில், கடந்த வா ரம் மழை பெய்து குளங்கள் நிரம்பின.

நேரடி நெல் விதைப்பில் பயிராகியுள்ள பயிருக்கு மழை நீர் டானிக் போல் அமைந்தது. நேரடி விதைப்பு செய்யப்படாத வயல்களில், தற்போது சம்பா நடவு பணிகள் நடந்து வருகிறது. நேரடி விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் களையெடுப்பு பணி நடந்து வருகிறது.தற்போது உள்ள சூழ்நிலையில் மழை விட்டு, விட்டு பெய்வதால், பயிரின் தூர்கள், நன்றாக தூர் கட்டி அதிக மகசூல் தரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் எதிர்பார்ப்புடன், சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மேட்டூர் அணை மூடபட்டதால், மழை தொடர்ந்து பெய்தாலும், தண்ணீர் வடிவதுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.கர்நாடகம் கைவிட்டாலும், இயற்கையான மழைநீர் எங்கள் வாழ்வாதர த்தை காப்பாற்றும் என்ற நம்பிக்கையி ல், விவசாயிகள் நம்பிகையோடு வி வசய பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடி குறைந்தது

திண்டுக்கல்:தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை மக்காச்சோள சாகுபடிக்கு ஏற்ற காலமாக இருக்காது என்பதால், விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறிவருகின்றனர்.திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள பகுதிகளான சத்திரப்பட்டி, மாட்டுப்பாதை, மஞ்சநாயக்கன்பட்டி, கள்ளிமந்தயம், போடுவார்பட்டி, பெரியகோட்டை, பொருளூர், தொப்பம்பட்டி பகுதிகளில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டு வருகிறது.இறவை பாசனம், மானாவாரியாக மாவட்டத்தில் மொத்தம் 45 ஆயிரம் ஹெக்டேரில் மக்காச்÷சாளம் சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த ஆண்டு அக்டோபர் வரை 41 ஆயிரம் ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு மக்காச்சோள சாகுபடி வெகுவாக குறைந்து இதுவரை ஆறாயிரம் ஹெக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. 105 நாள் பயிரான மக்காச்சோளம் தென்மேற்கு பருவமழையை நம்பியே பெரும்பாலும் பயிரிடப்படுகிறது.தவிர்ப்பு: பருவமழை பொய்த்ததால் மானாவாரி சாகுபடி செய்ய முடியாதநிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இறவை பாசன விவசாயிகளும் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் மக்காச்சோள

சாகுபடியை தவிர்த்தனர்.இதனால் மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை துவக்கியபோதும், இந்த பருவ காலம் மக்காச்சோளம் பயிரிட ஏற்ற காலம் இல்லை, என விவசாயிகள் கருதுகின்றனர்.தற்போது பயிரிட்டால், ஜனவரி இறுதியில்தான் அறுவடை செய்ய முடியும். மக்காச்சோளம் பூ பூக்கும் சமயத்தில் மழை நின்று பனிப்பொழிவு துவங்கிவிடும். இதனால் மானாவாரியில் பயிரிடப்படும் மக்காச்சோள பயிர்களுக்கு, தண்ணீர் இல்லாமல்
பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும், என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதையடுத்து மாற்றுப்பயிராக, குறைந்த கால பயிர்களான கொண்டை கடலை, சூரியகாந்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்

**ஒட்டன்சத்திரம் சந்தையில்முருங்கை விலை உயர்வு**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் சந்தையில், முருங்கைக்காய் வரத்து குறைந்துள்ளதால், விலை ஏறுமுகமாக உள்ளது.தாராபுரம், கள்ளிமந்தையம், அம்பிளிக்கை உள்ளிட்ட பல இடங்களில் விளைவிக்கப்படும் முருங்கைக்காய், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு கொண்டு வரப்படுகிறது. கேரள வியாபாரிகள் அதிகமாக வாங்கி செல்கின்றனர். கடந்த சில நாட்களாக பெய்த தொடர்மழை காரணமாக முருங்கை பூக்கள் உதிர்ந்து விட்டதால் மகசூல் பாதிக்கப்பட்டது. இதனால் முருங்கை வரத்து குறைந்து வருகிறது. மரம் முருங்கையை காட்டிலும் செடி முருங்கையே அதிகமாக கொண்டு வரப்படுகிறது. முருங்கை வரத்து குறைந்
துள்ள நிலையில், திருமணம் உள்ளிட்ட விசேஷங்கள் அதிகமாக நடைபெறுவதன் காரணமாகவும் முருங்கைக்காயின் தேவை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கிலோ 17 வரை விற்ற முருங்கை இந்த வாரம் 27 ரூபாய்க்கு விற்றது. காய்கறி கமிஷன் கடை உரிமையாளர் செல்வம் கூறுகையில், ""வரத்து குறைந்துள்ளதாலும், முகூர்த்த காலமாக இருப்பதாலும் முருங்கை விலை அதிகரித்து வருகிறது'' என்றார்.

**உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு மானியம்**

தேனி,: தேனி விவசாய வணிக துணை இயக்குனர் ரெங்கநாதன் மானியம் குறித்து கூறியதாவது: தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் பணிகளுக்கு கருவிகள், தொழில்நுட்ப கட்டுமானத்திற்கு அதிகபட்சமாக 50 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்ற வசதிகளை பெற கருவிகள், தொழில்நுட்ப கட்டுமானத்திற்கு 50 சதவீதம் மானியம், அதிகபட்சம் 10 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டய படிப்பு நடத்தும் நிறுவனங்களுக்கு புத்தகங்கள், பரிசோதனைக் கூட கருவிகள், போன்றவற்றிக்கு அதிகபட்சமாக 75 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தொழில்

முனைவோர் பயிற்சிகள் நடத்த பயிற்சிக்கு 2 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.கூடுதல் விபரங்களுக்கு,தேனி பொம்மையகவுண்டன்பட்டியில் அமைந்துள்ள விவசாய வணிக துணை இயக்குனரை அணுகலாம், என்றார்.

### முட்டை விலை 315 காசாக நிர்ணயம்



நாமக்கல் : தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே வாரத்தில், முட்டை விலை, 45 காசு உயர்ந்து உள்ளது. கோழிப் பண்ணையாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி மற்றும் சந்தை நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர்.இதையடுத்து, 310 காசுக்கு விற்பனைசெய்யப்பட்ட முட்டை விலையை, ஐந்து காசுகள் உயர்த்தி, 315 காசுக்கு விற்க முடிவு செய்யப்பட்டது.ஆக, கடந்த, 22ம் தேதி, 270 காசாக இருந்த முட்டை விலை, 30 காசு ஏற்றம் கண்டு, 300 காசு என, நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்பின், 25ம் தேதி, பத்து காசு உயர்த்தி, 310 காசாகவும், 26ம் தேதி ஐந்து காசு உயர்த்தி, 315 காசாகவும் நிர்ணயிக்கப்பட்டது.கடந்த ஒரு வாரத்தில் மட்டும் முட்டை விலை, 45 காசு ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்: சென்னை, 315 காசு, பெங்களூரு, 310 காசு, மைசூரு, 310 காசு, ஹைதராபாத், 290 காசு, மும்பை, 320 காசு, விஜய வாடா, 286 காசு, கோல்கட்டா, 325 காசு, பார்வாலா, 305 காசு, டில்லி, 331 காசு.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 54 ரூபாயாகநிர்ணயிக்கப்பட்டுள்ளது.பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 57 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

29.10.2012 A.M

### குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை டெல்டா மாவட்டங்களில் மீண்டும் கனமழை



திருவாரூர்: குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் டெல்டா மாவட்டங்களில் மீண்டும் கனமழை தொடங்கி உள்ளது. டெல்டா மாவட்டங்களில் கடந்த 17ம் தேதி முதல் வடகிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்ததால் சம்பா நடவு பணி பாதிக்கப்பட்டது. நேரடி நெல் விதைப்பு வயல்களில் களை எடுக்க முடியாமலும், களைக்கொல்லி மருந்து தெளிக்க முடியாமலும் பாதிப்பு ஏற்பட்டது. விவசாய பணிகள் முடங்கின.கடந்த சில தினங்களாக மழை பெய்யாததை அடுத்து விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்றது. இந்நிலையில், வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் திருவாரூர் மாவட்டம் முழுவதும் நேற்று மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இதையடுத்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தலைஞாயிறில் அதிகபட்ச மழையளவாக 134 மி.மீ பதிவு பதிவானது.நாகை மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு முதல் தொடர்ந்து கன மழை பெய்தது. இதனால் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டிருந்த நெற் பயிர்கள், நடவு செய்யப்பட்டிருந்த இளம் நெற்பயிர்கள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது.தஞ்சை மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய் தது. கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று கடலோர காவல்படையினர் அதிராம்பட்டினம் மீனவ கிராமங்களில் எச்சரிக்கைவிடுத்தனர். 3 ஆயிரம் மீனவர்கள் 2வது நாளாக நேற்றும் மீன்பிடிக்க செல்லவில்லை. காரைக்கால் மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு வேகமாக பெய்த மழை, தொடர்ந்து இடி, மின்னல் மற்றும்

காற்றுடன் கனத்த மழையாக பொரூ.ந்தது. இதனால் 4,500 விசைப்படகு மீனவர்கள் மற்றும் 1,000 பைபர் படகு மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், Ôநேற்று முன்தினம் மாலை முதல் ஓரடுக்கு அலை இருந்தது. கடலுக்குள் சென்று வலை விரித்து, படகுகளுக்கு நங்கூரம் பாய்ச்சிவிட்டு கரை திரும்பினோம். இந்நிலையில் அதிகாலையில் மூன்றடுக்கு அலை அடித்ததால் பைபர் படகுகள் கூட கடலுக்கு செல்லமுடியவில்லை. இந்த மூன்றடுக்கு அலை மாலை வரை நீடிக்கும் என்பதால், மீன்களுக்காக விரித்த வலை மட்டும் கிடைத்தால் போதும் என்ற நிலையில் உள்ளோம்Õ என்றனர்.

**மின்வெட்டு பிரச்னை மாட்டு தீவனங்கள் விலை கிடுகிடு**



விருதுநகர்:தமிழகம் முழுவதும் சென்னை நீங்கலாக மற்ற பகுதிகளில் தினமும் 16 முதல் 18 மணி நேரம் மின்வெட்டு அமலில் உள்ளது. இதனால் தொரூ.ற்சாலைகளில் உற்பத்தி கடுமையாக பாதித்துள்ளது. மாட்டுத்தீவனங்கள் தயாரிப்பதற்கான பாசிப்பயறு, உளுந்து, துவரை பயறுகளை பாலீஸ் மற்றும் உடைப்பின்போது வெளியாகும் கரூ.வுகள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த மாதம் வரை கரூ.வுகள் கிலோ ரூ.12 முதல் ரூ.13 வரை விற்பனை செய்யப்பட்டது. மின்வெட்டு காரணமாக உற்பத்தி பாதிப்பு மற்றும் கரூ.வுகளுக்கான தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இதனால் மாட்டுத்தீவனங்களின் மூலப்பொருட்கள் விலை கிலோ ரூ.25 வரை உயர்ந்துள்ளது. இந்த தட்டுப்பாட்டினால் நாட்டுச்சோளம், கம்பு உள்ளிட்ட நவதானியங்களின் விலைகளும் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விலை உயர்ந்துள்ளது. விலை உயர்வால் மாட்டுத்தீவனங்களின் விலையும் உயர்ந்துள்ளது. கடலைப்பருப்பு வரத்து குறைவு மற்றும் மின்வெட்டால் ஏற்பட்டுள்ள உற்பத்தி பாதிப்பால் கடலைபுண்ணாக்கு விலையும் கிலோ ரூ.30 லிருந்து ரூ.45 வரை

உயர்ந்துள்ளது. விலை உயர்வால் தனியார் பால் விற்பனையாளர்கள் பால் விலையை லிட்டர் ரூ.28லிருந்து ரூ.30 ஆக உயர்த்தி உள்ளனர். இதனால் மக்களின் செலவினம் உயர்ந்துள்ளது.

**டீத்தூள் ஏலம் விலை சரிவு**



குன்னூர் : குன்னூர் சிடிபிஏ ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 43வது தேயிலை ஏலம் நடந்தது. மொத்தம் 13.57 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 10.20 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.37 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றாலும், தரமான தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். 82 சதவீத தூள் விற்பனையானது. அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ.2 வரை விலை சரிவு ஏற்பட்டது.

இலை ரகம் சாதா கிலோ ரூ.70 முதல் ரூ.73 வரையிலும், உயர் வகை ரூ.95 முதல் ரூ.120 வரையும் விற்றது.

இன்றைய வேளாண் செய்திகள்

29.10.2012 A.M

**கடலூர் மாவட்டத்தில்**
**உழவர் பாதுகா பு திட்டத்தில் உறு பினர் சேர்க்கைக்கான சிற பு முகாம்**
**அடுத்த மாதம் 5–ந்தேதி தொடங்குகிறது**

கடலூர் மாவட்டத்தில் உழவர் பாதுகா பு திட்டத்தில் உறு பினர் சேர்க்கைக்கான சிற பு முகாம் அடுத்த மாதம்(நவம்பர்) 5–ந்தேதி தொடங்குகிறது.

கலெக்டர் அறிக்கை

இது தொடர்பாக கடலூர் மாவட்ட கலெக்டர் ராஜேந்திரரத்னூ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிரு பதாவது:–

21/2 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாக விவசாயம் செய் ம் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு, குறு விவசாயிகள்(நேரடி விவசாயம் செய்பவர்) மற்றும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்துக்காகவோ, குத்தகை அடி படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்த திட்டத்தின் கீழ் மூல உறு பினர்களாக பதிவு பெற தகுதி உள்ளவர்களாவார்கள். மேலும் அவர்களை சார்ந்து வாழும் குடும்ப உறு பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறு பினராக பதிவு செய்ய தகுதியானவர்கள்.

சிற பு முகாம்கள்

இதில் உறு பினராக சேர்ந்தவர்களுக்கு திருமண உதவித்தொகையாக ஆ டுகளுக்கு 8 ஆயிரம் ரூபா ம், பெ களுக்கு 10 ஆயிரம் ரூபா ம், முதியோர் ஓய்வூதியமாக ஆயிரம் ரூபா ம், உறு பினரின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகைகளும் பிற சலுகைகளும் அரசினால் வழங்க படுகிறது.

எனவே தகுதி உள்ளவர்களை உழவர் பாதுகா பு திட்டத்தில் உறு பினராக சேர் பதற்காக கடலூர் மாவட்டத்தில் அடுத்த மாதம்(நவம்பர்) 5–ந்தேதி முதல் 9–ந்தேதி வரை அந்தந்த கிராமங்களில் சிற பு முகாம்கள் நடக்கிறது. இந்த முகாம்களில் அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் மனு அளிக்கலாம்.

இவ்வாறு கலெக் டர் ராஜேந்திரரத்னூ தெரிவித்துள்ளார்.